நடந்துகொள்ளாமல் குற்றம் புரிந்தால் அதற்குத் தண்டிக்கப்படுவதற்கும் வேற்றுமைகள் இருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா? அப்படி இல்லாவிடில் அப்படிப்பட்ட தண்டனையை மாற்றி அமைக்க கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேற்றுமைகள் இல்லை. அந்தந்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. தவறுகளைப் பார்த்துத்தான் தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன.

Sri K. B. S. MANI : இந்த போலீஸ் இலாகாவைப் பொறுத்த அளவில் சாதாரணமாக கான்ஸ்டபிள்களிலிருந்து பல மாகாண அதிகாரிகள் வரையில் இம்மாதிரியான குற்றங்கள் செய்வதாகத் தெரியவருகிறது. அதனால் அவர்கள் குற்றங்களைச் செய்யாத முறையில் அவர்கள் சரிவர நடந்து கொள்வதற்கு அவர்கள் செய்கின்ற குற்றங்களைப் பரிசீலனை செய்து எதனால் அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்கிறார்கள் என்று கண்டு பிடித்து அந்த அளவில் குற்றம் செய்யாது இருக்கும்படியான சௌகர்யங்களைச் செய்யும் பொருட்டு அதற்குள்ள சட்டங்களையும் விதிகளையும் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அவர்கள் குற்றங்கள் செய்யாமல் இருப்பார்கள் என்பதற்காக அதைப்பற்றிப் பரிசீலனைசெய்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. சந்தர்ப்பத்திற்குத் தக்கபடிதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. சட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டியதில்லை. திருத்தி அமைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்பொழுது திருத்தி அமைத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

Sri A. GOVINDASAMY : அரசியல் குழப்பத்தின் காரணமாக அந்த குழப்பத்தை விளைவிப்பவர்களை தண்டிக்காமல் குழப்பத்தை சமாளிக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக தென்னாற்காடு டி.எஸ்.பி.யை மாற்றியிருப்பது உண்மைதானா? அப்படியானால் அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சமாதானம் சொல்லுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு தகவல் ஒன்றும் எனக்கு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் விவரமாக அந்தச் செய்கையைப் பற்றி விளக்கம் கூறலாம்.

Teaching of English

* 653 *Q.*—**Sri K. VINAYAKAM** (on behalf of **Sri S. LAZAR**): Will the Hon. the Minister for Finance be pleased to state whether steps have been taken to teach English from third standard?

The Hon. Sri C. SUBRAMANIAM: No, Sir.

Adulteration of foodstuffs

* 654 *Q.*—**Sri A. A. RASHEED**: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cases that were registered for adulteration of foodstuffs in the City of Madras during the year 1958–59;

(*b*) the steps taken to prevent adulteration in foodstuffs; and

(*c*) whether there is any proposal to bring in legislation to provide deterrent punishment for adulterators?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) 8,404 samples were taken. Of these 2,292 were found adulterated.

[9th April 1960

(*b*) After the Prevention of Food Adulteration Act, 1954, came into force, in addition to 5 Food Inspectors, 57 Divisional Sanitary Inspectors have been taking samples regularly in the City under the Act. 2,292 prosecutions were launched during the year of which 1,795 ended in conviction.

(*c*) No, Sir.

SRI A. A. RASHEED: Sir, is the Minister aware that milk and ghee are invariably adulterated in the City, and if so, will the Government entrust the detection of adulteration to the Police instead of Sanitary Inspectors?

THE HON. SRI M. A. MANICKAVELU: I do not understand why the Police should take up only the cases about milk and ghee. I said we have appointed more Inspectors to go into the question and from the number of detection and prosecution I have mentioned the hon. Member will understand that effective steps are being taken.

SRI V. K. KOTHANDARAMAN: சென்னை நகரத்திலுள்ள பல ஹோட்டல்களில் குடி தண்ணீர் கொடுக்கும்போது நல்ல குடி தண்ணீருடன் உப்பு குடி தண்ணீரையும் கலந்து கொடுக்கிறார்களே அதைப்பற்றி ஏதாவது புகார்வந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா? இல்லையானால் இதை வைத்துக்கொண்டாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

MR. SPEAKER: மூலக் கேள்வி தண்ணீரைப் பற்றிய கேள்வி அல்ல, உணவைப் பற்றிய கேள்வி. ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

THF HON. SRI M. A. MANICKAVELU: பலர் உப்புக் குடி தண்ணீர் வேண்டும் என்று கேட்டிருக்கலாம். அதனால் அப்படிக் கலந்துகொடுக்கிறார்களோ என்னமோ? அதனால் சில சமயங்களில் அப்படிக் கொடுக்கப்படலாம்.

SRI S. NARARAJA MONIGAR: May I know if all the major panchayats have got Food Inspectors and samples are being sent from these areas also, and if not, may I know what the Government propose to do in those areas?

THE HON. SRI M. A. MANICKAVELU: The Act is now worked in 159 local bodies.

Public Health Laboratories

* 655 *Q.*—SRI M. P. SARATHI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number and the places where Public Health Laboratories are functioning in this State;

(*b*) the number to be started newly during 1960; and

(*c*) whether trained personnel are available to serve in these institutions?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Eight District Public Health Laboratories have been sanctioned for establishment at the following places:—

(i) Vellore.
(ii) Palayamkottai.
(iii) Salem.